[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus)

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

15 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2017**

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## கிறிஸ்தவம் I

**கவனிக்க :**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** யூத மக்களின் கருத்துப்படி காபிரியேல் தேவதூதன் கொண்டுவந்த செய்தி,
(1) தீமையான செய்தியாகும். (2) பயம் மிக்க செய்தியாகும்.
(3) ஆச்சரியமிகு செய்தியாகும். (4) நல்ல செய்தியாகும்.

**2.** "திராட்சை மதுவோ வேறு மதுவோ அருந்தமாட்டார்." இதன்படி திருமுழுக்கு யோவான்
(1) மது அருந்தும் பழக்கத்தை ஓரளவு ஏற்பவர். (2) நசரேய விரதத்தை மேற்கொள்பவர்.
(3) நசரேத் நகரைச் சேர்ந்தவர். (4) தூயவராக துறவு மடத்தில் வாழ்பவர்.

**3.** பன்னிரு வயதான இயேசு குமாரனிடமிருந்து கிறிஸ்தவ பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டியது, கிறிஸ்தவ வாழ்வு என்பது
(1) பொறுப்புடன் செயற்படுதலாகும். (2) பிறரை மகிழ்வித்தல் என்பதாகும்.
(3) இறைவசனத்தைக் கடைப்பிடித்தலாகும். (4) பெற்றோருக்குக் கீழ்படிதல் என்பதாகும்.

**4.** திருமுழுக்கு யோவானின் பின்வரும் கூற்றுகளுள் இயேசுவானவரின் பணியைக் குறிப்பிடுவது எது ?
(1) எனக்குப் பின்னர் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார்.
(2) ஆபிரகாமிற்கு இக்கற்களிலிருந்து பிள்ளைகளை உண்டாக்குவதற்கு கடவுளால் ஆகும்.
(3) அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்.
(4) அவரது மிதியடி வாரை அவிழ்க்கக் கூடி எனக்குத் தகுதியில்லை.

**5.** 'புற இனத்தவர் ஒருவர் கடவுள் பயமுள்ளவர் (இறைபக்தர்)' என அடையாளம் காணப்படுவது,
(1) தேவாலயத்தில் பிரவேசித்து திருமுழுக்குப் பெற்ற பின்னராகும்.
(2) விருத்தசேதனத்தின் பின் திருமுழுக்குப் பெற்ற பின்னராகும்.
(3) யூதசமயம் கற்று திருமுழுக்குப் பெற்ற பின்னராகும்.
(4) செபாலயத்தில் திருமுழுக்குப் பெற்ற பின்னராகும்.

**6.** மறைத் தூதுப்பணியின் பாரதூரமான தன்மையை விளக்கும் இயேசுவானவரின் வெளிப்படுத்தல் யாது ?
(1) அறுவடை மிகுதி; வேலையாட்களோ குறைவு.
(2) கால்களின் தூசியை உதறிவிடுங்கள்.
(3) ஓநாய்களின் மத்தியில் ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போல உங்களை நான் அனுப்புகிறேன்.
(4) வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.

**7.** கிறிஸ்து, இம்மானுவேல் என்னும் எபிரேய கிரேக்கப் பதங்கள் குறிப்பிடுவன முறையே
(1) அருட்பொழிவு பெற்றவர், கடவுள் நம்மோடிருக்கிறார் (2) குரு, அரசன்
(3) டோரா, மெசியா (4) எகிப்தியர், பாபிலோனியர்

**8.** "தாங்க முடியாத சுமைகளை மக்கள் மேல் சுமத்துகிறீர்கள்." இவ்வாறு இயேசுவானவர் குற்றஞ்சாட்டியது
(1) ஏரோது அரசனை (2) பரிசேயரின் மறைநூல் அறிஞரை
(3) உரோம வல்லரசை (4) சதுசேயரை

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**9.** பவுலின் வாழ்வு பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| தர்சு நகரில் பிறந்தவர் → | உரோம பிரசை → | யூத குடும்பத்தில் பிறந்தவர் |
| பரிசேயனாகப் பயிற்றப்படல் → | கூடாரத் தொழில் பற்றிய அறிவு → | தாயின் கர்ப்பத்திலிருந்தே இறைபணிக்குத் தெரிவு |

மேற்காணும் தகவல்களிலிருந்து வெளிப்படுத்தப்படுவது,
(1) ஆண்டவர் பவுலின் பின்னணியை அமைத்த முறை (2) பவுல் சந்தித்த சவால்கள், துன்பங்கள்
(3) பவுலின் திருத்தூதுப் பயணங்களின் பின்னணி (4) பவுல் நிராகரித்த காரணிகள்

**10.** உண்மைத் தியாகக் காணிக்கை என இயேசுவானவர் கருதியது
(1) யூத மக்கள் வருமானத்தில் 1/10 ஐக் கொடுத்தல்
(2) யூத விதவை தன்னிடமிருந்த இரண்டு காசுகளையும் செலுத்தல்
(3) சக்கேயு தம் செல்வத்தில் 1/2 ஐ ஏழைகளுக்குக் கொடுத்தல்
(4) பரிசேயனாகிய சீமோன் விருந்து கொடுத்தல்

**11.** இயேசுவானவர் கிறிஸ்தவருக்குப் பெற்றுக்கொடுக்கும் விடுதலையானது
(1) அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகும். (2) லௌகீக வாழ்விலிருந்து விடுதலையாகும்.
(3) முழுமையான விடுதலையாகும். (4) ஆன்மிக விடுதலையாகும்.

**12.** "இவர் உண்மையாகவே நேர்மையானவர்" என்று இயேசுவின் மரணவேளையில் கூறியவர் யார் ?
(1) மனம் வருந்திய குற்றவாளி (2) உரோம நூற்றுவர் தலைவர்
(3) அரிமத்தியாவின் யோசேப்பு (4) சிரேனேயூர் சீமோன்

**13.** பல்வேறு துன்பங்களைச் சந்தித்தவர்கள் தொடர்பான பின்வரும் தகவல்களைக் கருத்திற் கொள்க.

| | துன்புற்ற நபர் / சமூகம் | துன்புற்ற வேளை |
|---|---|---|
| A | இறைவாக்கினர் | இறை செய்தியை அறிவித்தபோது |
| B | இஸ்ரயேல் மக்கள் | அந்நியர் மற்றும் கொடூர ஆட்சியாளர் கீழ் |
| C | சீடரும் ஆதிச் சபையினரும் | கிறிஸ்தவரை உரோம ஆட்சியாளர் துன்புறுத்தியமை |
| D | மீதியான சிறு மக்கள் கூட்டத்தினர் | சிறு குழுவினர் இறைவனைச் சார்ந்த வேளை |
| E | இயேசுவானவர் | உண்மைக்காக உழைத்தமையால் ஒதுக்கப்பட்டமை |

மேல் குறிப்பிட்டவர் மத்தியில் எகிப்து, பாபிலோனிய கொடூர ஆட்சியாளர்களினால் தாக்கப்பட்டவர்கள்
(1) A, B, D (2) A, B, C (3) A, B, E (4) B, C, D

**14.** உலகின் முடிவு பற்றி இயேசுவானவர் கூறியவற்றிலிருந்து அவர் நமக்கு வெளிப்படுத்துவது, இறுதிக்காலத்தில்
(1) பல்வேறு அனர்த்தங்களைச் சந்திக்க நேரிடும்.
(2) அனைத்தையும் முறையாகக் கற்றறிய வேண்டும்.
(3) உலகின் செயற்பாடுகளைப் பின்வைத்துவிட்டு ஆயத்தப்பட வேண்டும்.
(4) வெற்றியைக் கொண்டாடுவதற்காக எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**15.** "இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்." இவ்வாறு இயேசுவானவர் கூறியது
(1) சக்கேயுவின் வீட்டில் (2) பரிசேயனாகிய சீமோனின் வீட்டில்
(3) லேவியின் வீட்டில் (4) மார்த்தா, மரியா வீட்டில்

**16.** "எனக்கு அடுத்திருப்பவர்/அயலான் யார் ?" என்று திருச்சட்ட அறிஞர் இயேசுவிடம் வினவியபோது இயேசுவானவர் கூறிய உவமையாவது,
(1) செல்வந்தரும் இலாசரும் பற்றியாகும். (2) காணாமற்போன மகன் பற்றியாகும்.
(3) மன்னிப்பு வழங்காப் பணியாள் பற்றியாகும். (4) நல்ல சமாரியர் பற்றியாகும்.

**17.** இயேசுவானவரின் சமவெளிப் போதனையில் ஆறுதலைத் தரும் பேறுகளில் பின்வரும் பேறுக்குத் தகுதியானவர்கள்:
"ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில் ……………"
(1) நிறைவு பெறுவீர்கள். (2) நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்.
(3) இறையாட்சி உங்களுக்கே உரியது. (4) விண்ணரசு உங்களுடையதல்ல.

**18.** இயேசுவானவர் தமது சீடர்களுக்குத் தம்மைப் பற்றிய சரியான காட்சியை முன்வைத்தது
(1) அவர் தோற்றம் மாறிய வேளையில் (2) திருமுழுக்குப் பெற்றபோது
(3) சோதனைக்குட்படுத்தப்பட்டபோது (4) கெத்சமனே செபத்தின் போது

**19.** இயேசுவானவரின் போதனையின்படி கிறிஸ்தவராகிய நாம் விருந்தோம்பல் செய்ய வேண்டியது
(1) நம்மிடம் விருந்தை எதிர்பார்ப்பவர்களுக்கு (2) எமக்கு அடிக்கடி விருந்து வழங்குபவர்களுக்கு
(3) திரும்பவும் நம்மை உபசரிக்க முடியாதோருக்கு (4) குருக்களுக்கும் சபையினருக்கும்

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**20.** ஆரம்ப சீடரைத் தெரிவுசெய்தபோது பேதுருவின் வாழ்வில் காணப்பட்ட குணாதிசயங்களாவன:
(1) இரக்கம், தாழ்மை, பொறுமை (2) மனம்வருந்தல், அன்பு, பொறுமை
(3) நேர்மை, தாழ்மை, அன்பு (4) கீழ்ப்படிவு, தாழ்மை, மனம்வருந்தல்

**21.** சமுதாயத்தில் நல் மாற்றத்தைக் கொண்டுவருவதற்குச் செயற்பட வேண்டிய முறை,
(1) ஆபிரகாமின் பிள்ளைகள் போன்றாகும். (2) இறையரசின் குணங்களுக்கேற்பவாகும்.
(3) பிறர் மீது கைவைத்துச் செபித்தல் மூலமாகும். (4) பிறரின் கருத்துகளை எதிர்ப்பதன் மூலமாகும்.

**22.** "செல்வந்தரொருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிது." இதன் மூலம் இயேசுவானவர்
(1) செல்வத்தின்மேல் வாழ்வை இணைப்பது அறிவீனம் என்றார்.
(2) ஒட்டகங்களுக்கு அமைக்கப்பட்ட ஊசியின் காது பற்றி விளக்கினார்.
(3) தமக்குரியவற்றை விற்று தானம்செய்தலின் முக்கியத்துவம் பற்றிக் கூறினார்.
(4) செல்வந்தனை எச்சரிக்கை செய்தார்.

**23.** பின்வருவனவற்றுள் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் மிக உன்னத ஈவு எனக் குறிப்பிடுவது,
(1) அனைத்து ஞானங்களும் (2) அன்பு
(3) இறைவாக்குரைத்தல் வரம் (4) அனைத்து இரகசியங்கள் பற்றிய அறிவு

**24.** வாழ்க்கைப் பயணத்தில் நாம் எதிர்கொள்ளும் சில தடைகளாவன துஷ்பிரயோகம், வாகன விபத்து, போதைப்பொருள், மதுபானம் மற்றும் ஏனைய துயரங்கள் போன்றவையாகும். இது தொடர்பாக கிறிஸ்தவப் பிள்ளை என்ற வகையில் உமது பொறுப்பு என்ன ?
(1) தூசிக்கப்பட்ட பிள்ளைக்கு மட்டும் அமைதியாக இருந்து உதவுதல்
(2) சமுதாயத்தில் இவ்வாறான சவால்களை விடுப்போரைத் தேடிக் கண்டுபிடித்தல்
(3) சவால்களுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இறை அப்பணிப்புடனான இல்லம் அமைத்தல்
(4) சமுதாய மாற்றத்திற்காக எப்போதும் இறையரசின் விழுமியங்களுக்கு ஏற்ப செயற்படுதல்

**25.** பின்வருவோர் கிறிஸ்தவர் என்ற ரீதியில் சமுதாயத்திற்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள்.
A - தந்தை மைக்கல் ரொட்றிகோ B - அருட்திரு ஜோன் உவெஸ்லி
C - இவ்லின் கானி D - சக்கேயு
இவர்களில் இலங்கையில் பணிபுரிந்த இருவர் யாவர் ?
(1) A, B (2) A, C (3) B, C (4) C, D

**26.** யூத சமுதாயத்தில் பெண்களுக்கு மறுக்கப்பட்டவைகளை விலக்கி அவர்களுக்குப் புதிய வகிபாகங்களை ஏற்படுத்திக்கொடுத்த நிகழ்வு/நிகழ்வுகள்
(1) மார்த்தா மரியா வீட்டில், மரியா இயேசுவின் போதனைக்குச் செவிகொடுத்தலைப் பாராட்டுதல்
(2) பெண்கள் சிலரை இயேசுவின் சீடர்களாக ஏற்றுக்கொள்ளல்
(3) சபத் தினத்தில் முதுகு கூன் விழுந்த பெண்ணொருவரைக் குணப்படுத்தி ஆபிரகாமின் மகள் என்று ஏற்றுக்கொள்ளல்
(4) மேற்கூறிய அனைத்தும்

**27.** மனம்வருந்துதலின் பயனை விளக்கி இயேசுவானவர் மக்களைத் தூண்டுவதற்கு உபயோகித்த உவமை
(1) பெரிய விருந்து (2) கனி கொடாத அத்தி மரம்
(3) இடைப்பட்டியைக் கட்டிக்கொண்டு விளக்கேற்றுதல் (4) நம்பிக்கையுள்ள நம்பிக்கையற்ற பணியாளர்கள்

**28.** இறையரசிற்கு ஏற்ப இயேசுவானவர் தலைமைத்துவ வகிபாகத்திற்குக் கொடுத்த புதிய கருத்து
(1) பணியாள் தலைமைத்துவ வகிபாகம் ஏற்றல்
(2) முடியுமான வரை பணியில் ஈடுபடுதல்
(3) சமயோசித புத்தியுடன் செயல்படுதல்
(4) இருப்பவருக்கு மேலும் கொடுத்தல் என்னும் நிலைப்பாடு

**29.** எம்மாவு சென்ற இரு சீடர்கள் பெரு மகிழ்ச்சியுடன் திரும்பி எருசலேம் சென்றமை
(1) அவர்களின் உள்ளம் பற்றியெரிந்தமை பற்றிக் கூறுவதற்காகும்.
(2) உயிருடனானவரை மரித்தோர் மத்தியில் ஏன் தேட வேண்டும் எனக் கூறுவதற்காகும்.
(3) வெறுமையாயிருந்த கல்லறை பற்றி கூறுவதற்காகும்.
(4) மெய்யாகவே ஆண்டவர் உயிர்த்தார் என்பதைக் கூறுவதற்காகும்.

**30.** அன்று இயேசுவானவரின் சிலுவையைச் சுமந்து செல்வதற்கு உடனடியாக சிரேன் ஊரின் சீமோன் அழைக்கப்பட்டமை மூலம் இன்று நாம் பெறும் செய்தி
(1) நாமும் சிலுவையைச் சுமந்து செல்ல வேண்டும்.
(2) எதிர்பாராத வேளையில் ஒருவருக்கு உதவி செய்ய முன்வருதல் வேண்டும்.
(3) உயிர்த்தெழுந்த பண்டிகையில் சேர்ந்து உதவ வேண்டும்.
(4) அறியாதவர்க்கு உதவி செய்வதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**31.** துன்புறும் பணியாள் பற்றி இறைவாக்குரைத்த இறைவாக்கினர்
(1) ஆமோஸ் (2) எசாயா (3) எலியா (4) எசேக்கியேல்

**32.** "நீ மனந்திரும்பிய பின் உன் சகோதரர்களைப் பலப்படுத்து" என்று பேதுருவுக்கு கூறப்பட்டதன் மூலம் நாம் பெறும் படிப்பினை
(1) இயேசுவானவர் பொறுமையாக எம்மை மன்னிக்கிறார் என்பதாகும்.
(2) பேதுரு சகோதரரை மன்னித்தது போல நாமும் சகோதரர்களை மன்னிக்க வேண்டும்.
(3) இவை மனம் திரும்ப வைக்கும் ஆறுதலின் வார்த்தைகள் ஆகும்.
(4) கிறிஸ்தவர்கள் பிழை செய்யும்போது ஏனைய சகோதரர்கள் அவர்களைப் பலப்படுத்துதல் வேண்டும்.

**33.** பின்வருவனவற்றில் கிறிஸ்தவக் குடும்பத்தில் **இருக்கக்கூடாத** குணாதிசயம்
(1) குடும்பத்தை உருவாக்கியவர் கடவுளென ஏற்றுக்கொள்ளல்
(2) குடும்பத்தில் எல்லோரும் கடவுளுடனும் பிறருடனும் உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.
(3) குடும்பத்தில் யாவரையும் சமமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
(4) குடும்பத்தில் ஆண்பிள்ளைகளுக்கும் தகப்பனுக்கும் மட்டும் விசேட சலுகை அளித்தல் வேண்டும்.

**34.** பல்வேறு காரணங்களின் நிமித்தம் சமுதாயத்தில் வறுமை நிலவுகின்றது. இதனைப் போக்குவதற்கு முழுச் சமுதாயமும் செயற்பட வேண்டியது
(1) பொருளாதாரத்தை முன்னேற்றுவித்தல்
(2) ஏழைகளைக் கடவுளின் பிள்ளைகள் எனக் கருதி சிறு உதவி செய்தல்
(3) ஏழைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி சீவித்தல்
(4) இறையரசின் பெறுமதிகளான நீதி, அன்பு, சமாதானம் என்பவற்றை வளர்த்தல்

**35.** மகாத்மா காந்தி, மார்டின் லூதர் கிங் (கனிஷ்ட), டியற்றிச் பொன் ஹொபர் என்போர் வரலாற்று முக்கியத்துவம் பெறுவது
(1) சமுதாயத்தின் அநீதிகளுக்கெதிராகச் செயற்படும் குழுக்களை அமைத்தனர் என்பதாலாகும்.
(2) தம் வாழ்வைத் துச்சமாகக் கருதி அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்பினர் என்பதாலாகும்.
(3) ஆரம்பத்தில் ஏற்படுத்திய இயக்கங்கள் தோல்வியுற்றன என்பதாலாகும்.
(4) அநீதிகளின் மத்தியில் ஒருமித்து எழுந்து ஒன்றாக மரித்தார்கள் என்பதாலாகும்.

**36.** மந்தையைப் போசித்தல் ஒருவரின் முழு வாழ்வினதும் பணியாகும் எனக் காண்பித்த கிறிஸ்தவர்கள்
(1) தலைமைக் குரு, லேவியர், மறைநூல் அறிஞர், சீடர்கள்
(2) அரிமத்தியாவின் யோசேப்பு, சிரேன் ஊர் சீமோன், மகதலேனா மரியா, சீடர்கள்
(3) ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க, டெஸ்மன் டுட்டு, நெல்சன் மண்டேலா, எலிசபெத் பேக்கர்
(4) பவுல், பேதுரு, திருமுழுக்கு யோவான், சிலுவையடியில் நூற்றுவர்தலைவர்

**37.** கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு கொள்ளும் நாம், நீதியுள்ளதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு,
(1) பிறர் காணும் வகையில் முன்மாதிரியான சீவியம் நடத்துதல் வேண்டும்.
(2) பிரத்தியேக, இரகசியமானதொரு வாழ்வை மேற்கொள்ள வேண்டும்.
(3) சமுதாயத்தில் விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்குச் செயற்பட வேண்டும்.
(4) சமுதாய விழுமியங்களை நன்மையாக மாற்றுவதற்குச் செயற்பட வேண்டும்.

**38.** கீழ்காண்பவற்றில் கிறிஸ்தவ நம்பிக்கைக்குப் **பொருந்தாத** கூற்று எது ?
(1) சமுதாயத்தில் சொகுசான வாழ்வு வாழுதல் (2) நித்திய வாழ்வை எதிர்பார்த்தல்
(3) பாவ மன்னிப்பின் இறை வரத்தைப் பெறுதல் (4) பிறருக்கென அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு வாழுதல்

**39.** கீழே உள்ளவை பவுலின் மனந்திரும்புதல் பற்றிய அடையாளங்களாகும்.

| | மனந்திரும்பும் முன்னர் | மனந்திரும்பிய பின்னர் |
|---|---|---|
| A | துன்புறுத்தலில் ஈடுபட்டவர். | துன்பங்களை ஏற்றார். |
| B | தம்மைப் பற்றி தாமே முடிவு செய்தவர். | இறை நடத்துதலின்படி தீர்மானித்தார். |
| C | தமது பாதுகாப்புப் பற்றி கரிசனை கொண்டவர். | பிறர் பாதுகாப்புக்காகத் தனது வாழ்வை செலவழித்தவர். |
| D | குரோதம், பழிவாங்குதல், அழித்தல் என்பன ஆதிக்கம் செலுத்திய வாழ்வு வாழ்ந்தவர். | தமக்குக் குற்றம் இழைத்தவர்களுக்கும் மன்னிப்பு வழங்கினார். |

மேற்கூறியவற்றுள் அவரின் தியாக வாழ்வைக் காட்டுபவை:
(1) A, B (2) A, C (3) B, C (4) C, D

**40.** பன்மைச் சமுதாயத்தில் சமாதானம் நிலைத்திருப்பது,
(1) போர் இல்லாதிருக்கும் போதாகும். (2) நீதியும் நியாயமும் நிலைபெறும் போதாகும்.
(3) அந்நியருக்கு இரக்கம் காட்டும்போதாகும். (4) சமாதான இயக்கங்கள் ஆரம்பிக்கும் போதாகும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

15 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

## கிறிஸ்தவம் II

※ **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
※ முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) விசேட குழந்தைகளின் பிறப்புகள் பற்றிய செய்திகளை காபிரியேல் தேவதூதர் எவர்களிடம் கூறினார் ?

(ii) இயேசுவானவர் சோதிக்கப்பட்டபோது அவர் இறை சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார் என்பதற்கான **இரண்டு** ஆதாரங்களை முன்வைக்க.

(iii) இயேசுவானவர் குழந்தைகளை ஏற்றுக்கொண்டு அவர்களைப் போற்றிய சந்தர்ப்பங்கள் எவை ?

(iv) திருச்சட்ட அறிஞரிடம் இயேசுவானவர் முன்வைத்த **இரண்டு** குற்றச்சாட்டுகளைக் கூறுக.

(v) இறையரசின் முக்கிய கொள்கைகளை விளக்குவதற்காக இயேசுவானவர் கூறிய **இரண்டு** உவமைகள் யாவை ?

(vi) (அ) "என் விருப்பப்படியல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று கூறிச் செபித்த சந்தர்ப்பம் என்ன ?

(ஆ) அதிலிருந்து கிறிஸ்தவராகிய நாம் பெற்றுக்கொள்ளும் செய்தி என்ன ?

(vii) பின்வரும் வசனத்தைச் சரியாக நிறைவுசெய்க.

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்..."

(viii) (அ) அந்தியோகிய சபையினால் மறைத்தூதுப் பணிக்கு ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் யாவர்?

(ஆ) அவ்வாறு செய்யுமுன் அவர்கள் மேற்கொண்ட படிமுறை என்ன ?

(ix) (அ) பழைய ஏற்பாட்டில் துன்புறும் பணியாளர்கள் எவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ?

(ஆ) புதிய ஏற்பாட்டில் துன்பங்களைச் சுமக்கும் பணியாள் யாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது ?

(x) யூத சமுதாயத்தில் அந்நிய மக்கள் பற்றி யூதர்களுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட **இரண்டு** பொறுப்புகள் யாவை ?

**2.** (i) இயேசுவானவர் தமது சீடர்களை அழைத்த **இரண்டு** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக எழுதுக.

(ii) சீடர்கள் அழைக்கப்பட்ட வேளைகளில் அவர்கள் காட்டிய துலங்கல்கள் (பிரதிநடத்தைகள்) **மூன்றைக்** குறிப்பிடுக.

(iii) "அஞ்சாதே; இது முதல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்."

இந்த வாக்கைப் பின்பற்றும் தற்கால கிறிஸ்தவன் என்ற ரீதியில், இயேசுவானவர் தமது சீடர்களுக்குக் கொடுத்த பொறுப்புகளை நீர் இன்று எவ்வாறு நிறைவேற்றுவீர் ?

**3.** (i) (அ) இயேசுவானவர் தமது பணி பற்றி எச்சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தினார் ?

(ஆ) அவ்வேளையில் உபயோகித்த பழைய ஏற்பாட்டுத் திருமறைப் பகுதி என்ன ?

(ii) அவரின் அப்பிரசங்கத்திற்குச் செவிகொடுத்த மக்களின் துலங்கல்களை (பிரதிநடத்தைகள்) எழுதுக.

(iii) இன்றைய சமுதாயத்தில் பல்வேறு தேவைகள் இருப்போர் பற்றிய பட்டியல் ஒன்று தயாரித்து, அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாமென விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

4. (i) இறையரசின் பிரஜைகளான கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் எதிர்பார்க்கப்படும் விசேட வகிபாகங்கள் (பாத்திரங்கள்) **இரண்டை** முன்வைக்க.

(ii) அவற்றில் ஒரு வகிபாகத்தைத் தெரிவுசெய்து, அதனை விளக்குவதற்கு இயேசுவானவர் உதாரணமாகக் கூறிய உவமைக் கதை ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(iii) வருங்கால சமுதாயத்தில் பிரவேசிக்கும்போது நீர் இறையரசின் வகிபாகங்களை எவ்வாறு நிறைவேற்றுவீர் எனச் சுருக்கமாக விளக்குக.

5. "பவுல் அடிகளார் சவால்களின் மத்தியில் பணிசெய்தார்."

(i) பவுலுடன் இரண்டாம் மறைத்தூதுப் பிரயாணத்தில் இணைந்துகொண்டவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) அப்பிரயாணத்தின்போது அவர்கள் சென்ற **மூன்று** இடங்களைக் குறிப்பிட்டு, அந்த இடங்களில் அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(iii) பவுல் அடிகளார் அன்று சவால்களை எதிர்கொண்ட விதத்தை இன்றைய கிறிஸ்தவராகிய நாம் எமது பணியில் எவ்வாறு தொடர்புபடுத்திக் கொள்ளலாம் என விளக்குக.

6. "முன்மாதிரியான மனிதத்துவம்மிகு சமாதானத்துடன் கூடிய சகவாழ்வு முக்கியமாகும்."

(i) எபிரேய, கிரேக்க மொழிகளில் நிறைவான சமாதானம் (அமைதி) என்பதற்கு உபயோகித்த **இரண்டு** சொற்கள் யாவை ?

(ii) இயேசுவானவர் சமுதாயத்தில் சமத்துவத்தையும் சகவாழ்வையும் நிலைநாட்டுவதற்காகச் செயற்பட்ட **மூன்று** முன்மாதிரி நிகழ்வுகளைத் தருக.

(iii) கீழே தரப்பட்டுள்ள நிலைமைகளின் மத்தியில் சமாதானத்தை (அமைதியை) ஏற்படுத்தி சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கக்கூடிய வழிமுறைகளை முன்வைக்க.

(அ) ஆண், பெண் வேறுபாடு

(ஆ) அறிவுள்ள, அறிவற்றோர் வேறுபாடு

(இ) செல்வந்தர், ஏழை வேறுபாடு

(ஈ) எசமான், பணியாள் வேறுபாடு

(உ) மொழி வேறுபாடு

7. (i) இஸ்ரயேலர் எகிப்தில் பார்வோன் அரசனின் கீழ் எவ்வித ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் ?

(ii) இயேசுவானவர் இவ்வுலக பணியின்போது ஒடுக்கப்பட்டவர்களை விடுதலைசெய்வதற்கு எடுத்த படிமுறைகள் **மூன்றை** எழுதுக.

(iii) இன்றைய சமுதாயத்தில் மக்கள் எதிர்நோக்கும் துன்பங்கள், ஒடுக்குமுறைகள் யாதெனக் குறிப்பிட்டு, அவற்றிற்கு கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளக்கூடிய நடைமுறைகள் **ஐந்தை** முன்வைக்க.

* * *

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/